ஞாலகுருவின் படைப்புக்கள்

# “தமிழ்நாட்டில் இந்துவேத விழிச்சியோ, இந்துமத எழுச்சியோ ஏற்படாதது ஏன்?”



## சிந்தித்துப் பாருங்கள்!

- தமிழனுடைய இந்துவேதம் ஏன் சமசுக்கிருதத்தில் இருக்க வேண்டும்?
- வேதத்தின் தலைவன் சிவபெருமானால் அனுப்பப்பட்ட 63 நாயன்மார்களும் ஏன் சமசுக்கிருத மொழியில் பேசவில்லை?
- திருமாலால் அனுப்பப்பட்ட 12 ஆழ்வார்களும் ஏன் சமசுக்கிருத மொழியில் பேசவில்லை?

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம்,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 மார்கழி மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,125ஆம் ஆண்டின் மார்கழி மாத வெளியீடு**

***தலைப்பு:* “தமிழ்நாட்டில் இந்துவேத விழிச்சியோ, இந்துமத எழுச்சியோ ஏற்படாதது ஏன்?”**

# உள்ளுறை


1. **“கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கம்”** - கையெழுத்துப் பிறதி நகல் தொகுப்பில் கிடைத்த இந்த நகல் 1992ஆம் ஆண்டில் அக்டோபர் மாத கடைசி நாளன்று எழுதப்பட்டது. இந்து என்ற சொல்லுக்கும், இந்து வேதத்திற்கும் விளக்கங்கள் வழங்கும் வகையில் இந்தக் கட்டுரை உள்ளது.
2. **“தமிழ்நாட்டில் இந்துவேத விழிச்சியோ, இந்துமத எழுச்சியோ ஏற்படாதது ஏன்?”** - நாகர்கோயிலைச் சேர்ந்த இந்து மறுமலர்ச்சி செயல்வீரர் ஒருவருக்கு குருதேவர் 1992ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் எழுதிய திருவோலை.
3. **“ஒரு காலத்தில் இந்துமதம் உலகம் முழுவதும் பரவியிருந்தது”** - திருச்செந்தூரைச் சேர்ந்த சமய இலக்கியச் சொற்பொழிவாளர் ஒருவருக்கு குருதேவர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய விளக்கங்கள் அடங்கிய பதில் அஞ்சல்.
4. **“இந்துக்களுக்கு விளக்கம்”** - இந்துவேதம்தான் மூலவேதம் என்ற தலைப்பில் குருதேவர் ஆற்றிய விளக்க உரையின் ஒலிப்பேழையிலிருந்து (recorded audio cassette) எடுக்கப்பட்ட ஒரு பகுதி.
5. **“குருதேவரின் தன்னிலை விளக்கம்”** - தமது மாணுக்கர் ஒருவருக்கு குருதேவர் எழுதிய அஞ்சலில் குருதேவர் வழங்கிய தன்னிலை விளக்கம்.

ஓம்

சென்னை,
31.10.92

# கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கம்

1) இந்து என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் வகையில் பேசுதல் வேண்டும்.

ஒரு சொல்லுக்குப் பொருள் காலத்தால் அதிகமான பொருள் உண்டு. வளரும் மொழி, வளர்கின்ற மொழி ஆகியவற்றில் சொல்லுக்குப் பொருள் அதிகமாகும். வளர்ச்சியற்ற மொழியில் ஒரு சொல்லின் பொருள் குறையும். ஏனெனில், சொல் பழக்கத்தில் இருக்காததாலும், சொல்லுக்குரிய இலக்கியங்கள் இல்லாததாலும் பொருள் குறையும்.

2) இந்து என்றால் தமிழ், அமிழ்து, அழகு, அன்பு, அமைதி, அருள், அணு, உயிரணு, கரு, விந்து, ஆவி, ஆன்மா, ஆருயிர், சீவன், கடவுள், தெய்வம், தேவதை, வேதம், குடும்பம், இல்லறம்.....

இந்து என்ற சொல் இருக்கு, யாம (சாம), அசுர, அதர்வான வேதத்தில் உள்ளது. மேலே குறிப்பிட்ட சொற்களுக்கு வேதத்தின் மூலம் பொருள்கள் உள்ளன.

- இந்து நான்கு வகைப்படும்; வேதம் நான்கு வகைப்படும்.
- இந்துவின் அருள் வேண்டுமென்றால் முறைப்படி பயிற்சி செய்ய வேண்டும். கடவுளின் அருள் வேண்டுமென்றால் முறைப்படி பூசை செய்ய வேண்டும்.

- இந்து பழகப் பழக இனிமை தரும். தமிழ் பழகப் பழக இனிமை தரும்.

3) இயற்கையின் இந்து கடவுளை நினைவு கூரும். இயற்கையின் அழகு கடவுளை நினைவு கூரும். ... அதுபோல இந்து என்ற சொல் இந்துவேத நூல்களான 396லும், இந்துமத 36 நூல்களிலும் ஆயிரக்கணக்கான பொருள்களில் கையாளப்பட்டிருக்கிறது. எனவேதான், இந்து வேத, இந்து மத நூல்களிலும் பயிற்சி பெறுவதற்கு ஏற்பவே, "இந்து என்ற சொல்லுக்கு நூற்றுக்கு மேற்பட்ட சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கிறது" என்று சிலரும்; "இந்து என்ற சொல்லுக்கு பல நூறு சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கிறது" என்று சிலரும்; "இந்து என்ற சொல்லுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கிறது" என்று சிலரும் கருத்து தெரிவிக்கிறார்கள்.

4) யாருக்காவது நிரம்ப ஓய்விருந்து இந்துவேதத்தையும், இந்துமத நூல்களையும் அதாவது 432 நூல்களையும் படிப்பார்களேயானால் "இந்து என்ற சொல்லுக்கு சில ஆயிரக்கணக்கான சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கிறது" என்றும்; "இந்து என்ற சொல்லுக்கு பல்லாயிரக்கணக்கான பொருள் சொல்லப்பட்டிருக்கிறது" என்றும் சொல்பவர்கள் தோன்றுவார்கள், தோன்றுவார்கள், தோன்றுவார்கள்.

5) **நான்கு இந்து வேதங்கள்**.

இந்து வேதம் உலக வேதம், இந்து வேதம் உலகப் பொது வேதம், இந்து வேதம் உலக முதல் வேதம், இந்து வேதம் உலக மூல வேதம், இந்து வேதம் மனிசர்களை மனிதர்களாக்கும் வேதம்.

இந்து வேதம்தான் தனிமனித வாழ்க்கையை செம்மைப்படுத்தியது, இந்து வேதம்தான் குடும்ப வாழ்க்கையை நியாயப்படுத்தியது, இந்து வேதம்தான் ஆணும் பெண்ணும் குழந்தைகளோடு வாழும் இல்லற

வாழ்க்கையின் விதியை வகுத்தது, இந்து வேதம்தான் ஆண் தன் மனைவியையும், குழந்தைகளையும் காப்பாற்றும் கடமையை கற்பித்தது.

இந்து வேதம்தான் பல குடும்பங்கள் சேர்ந்து வாழும் சமுதாய அமைப்பை கருவாக்கி, உருவாக்கி, செயலாக்கி நிலைப்படுத்திற்று. இந்து வேதம்தான் சமுதாயத்தைப் பாதுகாக்க அரசியல் என்ற ஓர் அமைப்பை உருவாக்கிற்று.

அரசு என்றால் இந்து வேதம், அரசு என்றால் தலைமை, அரசு என்றால் அழகு, அரசு என்றால் பாதுகாப்பு, அரசு என்றால் கட்டுக்கோப்பு, அரசு என்றால் கடமை, அரசு என்றால் வலிமை, ... என்று பொருள் சொல்லிக் கொண்டு வரும் போதே அரசு என்றால் **இந்து** என்பதுதான் சிறந்த பொருள் என்று இருக்கு வேதத்திலும், அதர்வான வேதத்திலும் பல இடங்களில் 'அரசு' என்ற சொல்லுக்குப் பொருள் கூறப்படுகிறது.

யாம வேதத்து முனிவர்கள், யாம வேதம் ஓதுகின்ற காலங்களில் அரசர்களோ, அரச குடும்பத்தவர்களோ யாகசாலையில் எழுந்தருள வேண்டும் என்று யாமவேதத்து யாகசாலை நடைமுறை பற்றி கூறுகின்ற வகையில் இந்துவேதம்தான் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என்ற மூன்றையும் பாதுகாப்பதற்காக அரச குடும்பங்களை முதன்மைப் படுத்தி அரசு என்ற அமைப்பையும், அரசியல் நடைமுறைகளையும் தெளிவாக வகுத்தளிக்கிறது.

அதாவது கடவுள்களுக்கு அடுத்தபடியாக குருவழி வாரிசுகளால் உண்டாகும் அரச குடும்பங்களுக்கு மதிப்பும், மரியாதையும், பொறுப்பும், கடமையும் வழங்குகின்றன. இதைத்தான் இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான வேதம் என்ற மூன்று வேதங்களுமே அரசின் கடமை 'கடவுள்களுக்கு பூசைகளையும், கோயில்களுக்குப் பாதுகாப்பும், மக்களுக்கு நல்வாழ்வும் வழங்குவதாகும்' என்று குறிக்கின்றன.

இதையே, “இந்துவாகப் பட்டவன் கடவுளைக் காக்க வேண்டும். இந்துவாகப் பட்டவன் கோயிலையும், கோயில் சொத்துக்களையும் காக்க வேண்டும். இந்துவாகப் பட்டவன் கோயில் பூசைகளை ஒழுங்காக நடைபெறுமாறு செய்ய வேண்டும்.”

இந்த வாசகங்களில் ‘இந்து’ என்ற சொல்லுக்கு ‘அரசன்’ என்று பொருள். ‘இந்து’ என்ற சொல்லுக்கு ‘குடிமகன்’ என்று பொருளுண்டு. ‘இந்து’ என்ற சொல்லுக்கு ‘மெய்யான பத்தன்’ என்று பொருளுண்டு. **இந்து** என்ற சொல்லை முதலில் ஒவ்வொரு தமிழனும் நன்கு நினைவில் வைத்து அடிக்கடி தனது வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். நமது சொற்பொழிவை கேட்டுச் செல்கின்ற ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் ‘இந்து’ என்ற சொல்லை ஓர் ஒப்புயர்வற்ற சொல்லாக அதிகப் பயன்மிக்க சொல்லாக அடிக்கடிப் பயன்படுத்த வேண்டும். முதலில் தான் ஓர் இந்து என்று சொல்ல வேண்டும். நமது குடும்பம் இந்துக் குடும்பம். நமது மதம் இந்து மதம், நமது பண்பாடு இந்துப் பண்பாடு, நமது நாகரிகம் இந்து நாகரிகம், நமது வாழ்க்கை இந்து வாழ்க்கை, நமது சமுதாயம் இந்து சமுதாயம், நமது நாடு இந்து நாடு, நமது கலை இந்துக் கலை, நமது இலக்கியங்கள் இந்து இலக்கியங்கள், நமது கல்வி இந்துக் கல்வி, நமது உணர்வு இந்து உணர்வு, நமது சட்டங்கள் இந்து சட்டங்கள், ... அப்பொழுதுதான் ***ஹிந்து*** என்கிற ஆட்சி மாறும். இந்து மதத்தின் ஒரு பகுதிதான் சைவ மதம், சிவ மதம். இந்து மதத்தின் ஒரு பகுதிதான் வைணவ மதம். அறுபத்து மூன்று நாயன்மார்களும் இந்துக்களே, பன்னிரண்டு ஆழ்வார்களும் இந்துக்களே.

6) நமது இந்து வேதம், இந்து மதம், இந்து மதக் கடவுள்கள், இந்து மத வரலாறுகள், இந்து மதப் புராணங்கள், இந்து மதக் கலைகள், இந்து மதக் கழகங்கள், இந்து மதக் கவிதைகள், இந்து மதக் கீதைகள், இந்து மத இலக்கியங்கள், இந்து மத அருட்பாடல்கள்,

இந்து மத அருளாளர் வாழ்க்கைகள் அல்லது வாழ்வியல்கள், இந்து மத அருளாளர்களின் போதனைகள், இந்து மத அருளாளர்களின் சாதனைகள், இந்துக் கடவுள்களின் அற்புதங்கள், இந்து வேதப் பேருண்மைகள், இந்து மதச் சாத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள், இந்து மதப் பூசைகள், பூசைவிதிகள், பூசைமுறைகள், இந்து மதத் தத்துவங்கள், இந்துமத சித்தாந்தங்கள், செயல் சித்தாந்தங்கள்; இந்து என்ற சொல்லும், இந்தச் சொல் கூறும் பொருள்களும், பொருள்களை விளக்கும் வேதங்களும், வேதங்களைச் செயலாக்கும் இந்துமத நடைமுறைகளும், பதினெண்சித்தர்களின் அருட்கொடையே ஆகும். பதினெண்சித்தர்கள் அருளியதே இந்து வேதம். பதினெண்சித்தர்களின் அருட்கொடையே இந்து மதம்.

நம்மவர்கள் எல்லோருமே மேடையில் கேட்க வேண்டிய ஒரு கேள்வி - இன்றைக்கு நாட்டு நடப்பில் பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்த எங்களையும், எங்களுடைய இ.மு.க.வையும், இ.ம.இ.யையும் வியப்பாகப் பார்க்கிறார்கள். சிலர் வேண்டா வெறுப்பாகக் கூடப் பார்க்கிறார்கள். பலர் வாய்விட்டே “இந்து மதத்திற்கென எத்தனையோ மடங்கள் இருக்கின்றன, சாமியார்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், கட்சிகள், தலைவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது திடிரென்று பதினெண்சித்தர் மடாதிபதி எதற்கு? பதினெண்சித்தர் மடம் எதற்கு? இந்த சிவப்புக் கட்டிய சன்னிதானம் எதற்கு? இந்த இ.ம.இ., இ.மு.க. எதற்கு?, இவர்களால் அனாவசியான புதுக் குழப்பம் வரத்தான் போகிறது? ...” அப்படி என்று எங்கள் காதுபடப் பேசிக் கொள்கிறார்கள்.

எங்கள் சார்பாக நாங்கள் கை கூப்பி வணங்கி இவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்: எந்த மடாதிபதியாவது, அல்லது எந்த மடமாவது, அல்லது எந்தச் சாமியாராவது, அல்லது எந்தக் கட்சியாவது, “இந்தா, இந்த இந்துவேதத்தை வைத்துக்

கொள்; இந்த இந்து வேதத்தைப் படித்துப் புரிந்து கொள்; இந்தா இந்த இந்து வேதம்தான் நமது இந்து மத வாழ்க்கைக்கு அடிப்படையான கருத்துக்களை, ஆதாரமான கருத்துக்களை விளக்குகிறது ...” என்பதை கொடுத்திருக்கிறார்களா? கொடுத்திருக்கிறதா? இல்லையே! இல்லையே! இல்லையே!

இன்றைக்கு நாங்கள் கேட்கிறோம். எங்களுக்கு இந்து வேதம் தேவை, நாங்கள் இந்து வேதத்தைப் படிக்க வேண்டும். நாங்கள் இந்து வேதத்தைப் பிறருக்குப் படித்துக் காட்ட வேண்டும் என்று கேட்கிறோம். இதே கேள்வியை உங்களில் பலர் கேட்கட்டும். எங்களுக்கும், உங்களுக்கும் இந்து வேதத்தைத் தரக்கூடிய ஒரே ஒரு மடம் பதினெண்சித்தர் மடம்தான். ஒரே ஒரு தலைவர் பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்தான். அதுவும் நமக்குப் புரியும் தமிழ் மொழியில் இந்து வேதம் தரப்படுகின்றது.

ஐயா! கிராமத்தில் எழுத்தறிவில்லாத புல் அறுத்துப் பிழைக்கின்றவர்களிடமும், விறகு வெட்டிப் பிழைக்கின்றவர்களிடமும், கூலி வேலை செய்து பிழைக்கின்றவர்களிடமும் அவர்களுக்கும் நமக்கும் புரியாத சமசுக்கிருத மொழியிலிருந்து வேத வாசகங்களைக் கூறினால் யார் ஏற்றுக் கொள்வது? ஐயா! சிந்தித்துப் பாருங்கள்! தமிழனுடைய இந்து வேதம் ஏன் சமசுக்கிருதத்தில் இருக்க வேண்டும்? தமிழ்நாட்டில் நேரில் தோன்றி, தமிழ் பேசி 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய வேதம் ஏன் சமசுக்கிருதத்தில் இருக்க வேண்டும்? வேத நாயகன், வேதத்தின் தலைவன் எனப்படும் சிவபெருமான் 64 முறை திருவிளையாடல் நிகழ்த்த நேரில் வந்தபோது ஒருமுறை கூட ஏன் சமசுக்கிருத மொழி பேசவில்லை? சிவபெருமானால் அனுப்பப்பட்ட 63 நாயன்மார்களும் ஏன் சமசுக்கிருத மொழியில் பேசவில்லை? திருமாலால் அனுப்பப்பட்ட 12 ஆழ்வார்களும் ஏன் சமசுக்கிருத

மொழியில் பேசவில்லை? இப்படி இருக்கும் போது இவர்கள் கூறியதாகக் கூறப்படும் இந்து வேதம் எப்படி சமசுக்கிருதத்தில் இருக்கும்? சிந்தியுங்கள்.

நாங்கள் வைத்திருக்கின்ற இந்து வேதம், அதாவது பதினெண்சித்தர் மடம் வைத்திருக்கின்ற இந்து வேதம் சிவனின் வேத வாசகங்களையும், சத்தியின் வேத வாசகங்களையும், திருமாலின் வேத வாசகங்களையும், பிறம்மணின் வேத வாசகங்களையும், இந்திறனின் வேத வாசகங்களையும், தென்றிசைக்கோன் எனப்படும் இயமனின் வேத வாசகங்களையும், ... இன்னும் பல கடவுள்களின் வேத வாசகங்களையும் ஒருசேரப் பெற்றுள்ள 396 நூல்களை உடையது. அதுவும் எளிய, இனிய, தெள்ளிய, ஆற்றொழுக்கான, சீரான தமிழ் உரைநடையில் இருக்கின்றன. ஆனால், இந்த உரைநடை கவிதை போல் தெரியும். இலக்கண இலக்கிய ஆசிரியர்கள் இவற்றைக் கவிதைகளாக பாராட்டுகிறார்கள், கருதுகிறார்கள். ஆனால், இவை உரைநடையே. இது மட்டுமல்லாமல் இந்த 396 வேதங்களின் வேதக் கருத்துக்களை செயல்படுத்துவதற்காக அல்லது நடைமுறைப்படுத்துவதற்காக 36 இந்துமத நூல்கள் வேதத்தோடு சேர்த்தே வழங்கப்பட்டு இருக்கின்றன. இந்த முப்பத்தாறு நூல்களும் மிக எளிதில் பொருள் புரிந்து கொள்ளும்படியாகவும், நினைவில் வைத்துக் கொள்ளும் படியாகவும் பெரும்பாலும் ஒருவரி உரைநடை வாசகங்களாகவே இருக்கின்றன.

இங்கு, ஒன்றை குறிப்பிட விரும்புகிறோம். பிற்காலப் பதினெண்சித்தர்களின் பாடல்கள்தான் செய்யுள் நடையில் எழுதப்பட்டன. அதுவும் இசையோடு பாடப்பட எழுதப்பட்டவையே. குறிப்பாக கும்மிப் பாட்டு, தாலாட்டுப் பாடல், காவடிச் சிந்து, அருள்வேட்டல் அல்லது சாமியை வருந்துதல் (அருள்வேட்டல் மாலை), ஏற்றப்பாட்டு, தெம்மாங்கு, ... முதலிய நாட்டுப் பாடல்கள் முறையிலேதான் சித்தர்களின் பாடல்கள் இருக்கின்றன. அதாவது, பதினெண்சித்தர்கள் அருளிய

இந்துவேதமும், இந்துவேதத்தின் செயல்வடிவான இந்துமத நூல்களும், இசைப்பாடல்களும் ஏறத்தாழ எல்லோருமே புரிந்து கொள்ளும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் இருக்கின்றன.

இந்தப் பேருண்மைகளை உங்களுக்காக விளக்கிச் சொல்வதற்காகத்தான் இ.மு.க., இ.ம.இ., அ.வி.தி., பதினெண்சித்தர் மடத்துச் சன்னிதானங்கள் வெளிப்பட்டிருக்கிறோம். இந்துவேதத்தை உங்கள் கைகளில் தர வந்திருக்கிறோம். இந்துவேதத்தை உங்களுடைய செவிகளில் சொல்வதற்காக வந்திருக்கின்றோம்.

நாம், நமது வேத நூல்களை, மத நூல்களை அச்சிட்டு எல்லோருடைய கைகளிலும் கொடுக்க வேண்டும் என்ற உணர்வுக்கு என்றைக்கு வருகிறோமோ; அன்று முதல்தான் இந்துமதச் சிதைவு, இந்துமதச் சீரழிவு, இந்துமத நலிவு, இந்துமத மெலிவு, இந்துமத எதிர்ப்பு, இந்துமத மறுப்பு, இந்துமத வெறுப்பு, நாத்திகம் முதலியவைகள் எல்லாம் தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும். எதிர்த்து முறியடிக்கப்பட்டிடும், எதிர்த்து முறியடிக்கப்பட்டிடும், எதிர்த்து முறியடிக்கப்பட்டிடும். அதுவரை எத்தனை கோயில்கள் புதுப்பிக்கப்பட்டாலும் சரி, எத்தனை கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டாலும் சரி, எத்தனை திருவிழாக்கள் பெரிய அளவில் ஆடம்பரமாக நிகழ்த்தப்பட்டாலும் சரி, எத்தனை சித்து விளையாடல்கார சாமியார்கள் தோன்றினாலும் சரி, எத்தனை ஆச்சாரியார்கள், மடாதிபதிகள் நாடெங்கும் பாதயாத்திரைகள் வந்து அருளுரையாற்றினாலும் சரி, எத்தனை சொற்பொழிவாளர்கள் புராண இதிகாசச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினாலும் சரி, எத்தனை பேர் இராமாயண பாரதக் கதைகளை வாரக் கணக்கில் மாதக் கணக்கில் சிரிக்க சிரிக்க சுவையோடு விளக்கி உரைத்தாலும் சரி இந்துமதத்தைக் காப்பாற்ற முடியாது, இந்துமதத்தைக் காப்பாற்ற முடியாது, இந்துமதத்தைக் காப்பாற்ற முடியாது, இந்துமதத்தைக் காப்பாற்றவே முடியாது.

எனவே, கோயில் உண்டியலில் பணத்தைக் கொட்டுவதை விட மடாதிபதிகளுக்கும், ஆச்சாரியார்களுக்கும், சாமியார்களுக்கும், சித்து விளையாடல் காரர்களுக்கும் காணிக்கைகளை கொட்டி கொட்டி குவிப்பதாலோ எந்தவிதப் பயனும் ஏற்பட்டு விடாது. எந்தவிதப் பயனும் ஏற்பட்டு விடாது, எந்தவிதப் பயனும் ஏற்பட்டு விடாது, எந்தவிதப் பயனும் ஏற்பட்டு விட முடியாது. எனவே, இந்துவேத நூல்களை அச்சிட வேண்டும்! இந்துமத நூல்களை அச்சிட வேண்டும். இந்துமத வரலாற்று நூல்களை அச்சிட வேண்டும். இந்துமத அருளாளர்களின் சாதனைகளையும், போதனைகளையும் அச்சிட வேண்டும். இந்துவேத விளக்கங்களை அச்சிட வேண்டும். இந்துவேத பொதுக் கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்த வேண்டும். இந்துவேத கருத்தரங்குகளையும், இந்துமதக் கருத்தரங்குகளையும் நடத்த வேண்டும். இந்துவேதப் பாடசாலைகளையும், பள்ளிக் கூடங்களையும், கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தோற்றுவித்து நடத்த வேண்டும்.

இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் அறிவுப் பூர்வமாக கல்வியாகக் கற்கக் கூடிய விஞ்ஞானங்களே. இந்துமதக் கோயில்கள் இந்து வேத இந்துமதக் கல்வியை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்குகின்ற நிலையங்களே! இந்துமதக் கோயில்கள் கடவுள்களின் வீடுகளே! இந்துமதக் கோயில்கள் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் தருகின்ற சமூகநல மன்றங்களே! இந்துக் கோயில்கள் கலை வளர்க்கும் கலைக் கூடங்களே! ... என்ற பேருண்மைகளை விளக்கிடவும் தயாராக உள்ள இந்துமதத்தின் தலைமை பீடம், இந்துமதத்தைத் தோற்றுவித்த தலைமைப் பீடம், இந்துமதத்தை இம்மண்ணுலகிற்கு வழங்கிய பதினெண்சித்தர் மடம் என்று மிகத் தெளிவாக தன்னுடைய பாரம்பரிய வரலாற்றைக் கூறி இந்துவேதம் வளர்க்கவும், இந்துமதம் காக்கவும் முன்வந்திருக்கின்ற பதினெண்சித்தர் மடத்திடமும், அதனுடைய சன்னிதானங்களிடமும், அதனுடைய அ.வி.தி., இ.ம.இ., இ.மு.க.

எனும் நிறுவன நிர்வாகங்களிடமும் நம்பிக்கை வைத்து என்றைக்கு இந்துக்கள் அந்நிய நாட்டு மதங்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து பொருளுதவிகளும், ஆளுதவிகளும் வந்து குவிகின்றனவோ அதுபோல் பொருளுதவிகளையும், ஆளுதவிகளையும் தாராள மனத்தோடு ஏராளமாகக் கொட்டிக் குவித்தால்தான் இந்துமதத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்! இந்துமதத்தின் நலிவுமெலிவுகளை தடுக்க முடியும். இந்துமதத்திற்கு ஏற்பட்டு வரும் சிதைவுகளையும், சீரழிவுகளையும் உடனே தடுத்து நிறுத்த முடியும். இந்துமத மறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும், எதிர்ப்பாளர்களும், நாத்திகர்களும் இருந்த இடம் தெரியாமல் போகும்படிச் செய்யப்படுவார்கள்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. இரு வேறு கையெழுத்துகளில் இருந்தன. நகலில் ஒரு பக்கம் தெளிவாக இல்லை. 2018 சூன் மாதத்தில் கிடைத்த நகல்களில் ஓரளவு தெளிவாகத் தெரிந்ததனால், தெளிவில்லாமல் இருந்திட்ட பகுதிகள் சரி செய்யப்பட்டுள்ளன.//**

# தமிழ்நாட்டில் இந்துவேத விழிச்சியோ, இந்துமத எழுச்சியோ ஏற்படாதது ஏன்?

பொன்னேரி,
9-12-1992.

அனுப்புநர்:
ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்,
3, என்.சி.ஓ. நகர், பொன்னேரி - 601204.

இந்து மறுமலர்ச்சி செயல்வீரர், திரு பாலகிருட்டிணன் (Advocate, 57, Court Road, Nagerkoil) அவர்கள் சமூகத்திற்கு,

1. குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் திரு மடத்திலிருந்து விடுக்கப் படும் செயல்நலம் பாராட்டுத் திருவோலை.

2. செயலில் சுறுசுறுப்பும், நோக்கிலும் போக்கிலும் விறுவிறுப்பும், பெருவிருப்பும் கொண்ட வீர இளைஞரே! உயர்திரு பாலகிருட்டிணன் Advocate அவர்களே!

இந்து மதத்தின் இன்றைய நிலையில் உள்ள மாபெரும் மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், ஆச்சாரியார்கள், தம்பிரான்கள், குருக்கள்கள், பூசாறிகள், புராண விரிவுரையாளர்கள், ... முதலியோர்களிடம் காணக் கிடைக்காத, காண முடியாத இந்துமதப்

பற்றும், பாசமும், அக்கறையும், ஆர்வமும், ஆழ்ந்த ஈடுபாடும் மிகுதியாகப் பெற்றிருக்கிறீர்கள் தாங்கள். இதைக் கண்டு களி பேருவகை கொண்டுதான் நமது குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் தங்களுக்கு இந்த **செயல்நலம் பாராட்டு வாழ்த்துத் திருவோலை மடல்** விடுத்து அருள் புரிகின்றார். புரிந்து செயல்பட வருக!

3.

1 இந்துவேத வரலாறு,
2 இந்துமத வரலாறு,
3 இந்து வேத நூல்கள்,
4 இந்துமத நூல்கள்,
5 இந்துவேத நூல் சாரங்கள்,
6 இந்துமத நூல் சாரங்கள்,
7 இந்துவேதத் தலைவர்கள்,
8 இந்துமதத் தலைவர்கள்,
9 இந்துவேதப் போதனைகள்,
10 இந்துமதச் சாதனைகள்,
11 இந்து மன்னர்கள்,
12 இந்து அருளாளர்கள்,
13 இந்து இலக்கியங்கள்,
14 இந்துக் கலைகள்,
15 இந்துக் கோயில்கள்,
16 இந்துக் கடவுள்கள்,
17 இந்துக் குருபீடங்கள்,
18 இந்து அருளாளர்கள்,
19 இந்து புராண இதிகாசங்கள்,
20 இந்து மத விழிச்சி,

21 இந்துமதத் தாழ்ச்சி,

22 இந்துமத இகழ்ச்சி,

23 இந்துமத எதிரிகளின் சூழ்ச்சி,

24 இந்துமதத் துரோகிகளின் செயல்கள்,

25 இருபதாம் நூற்றுண்டும் இந்துமதமும்,

26 இன்றைக்கு இந்துமதத்திற்காக என்ன செய்ய வேண்டும்?,

27 இந்துவேதம் வளர்க்க என்னென்ன செய்ய வேண்டும்?,

28 இந்துமதம் காக்க எப்படியெப்படி செயல்பட வேண்டும்?,

29. இந்துவேதம் இருக்கிறதா? இறக்கிறதா?,

30. இந்துமதம் இருக்குமா? இறக்குமா?,

... முதலிய தலைப்புக்களில் ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும், பட்டிமன்றங்கள் நிகழ்த்தப்பட வேண்டும், பொதுக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். இந்த நோக்கிலும், போக்கிலும் ஊக்கத்தோடு ஆக்கப் பணியில் செயல்பட்டு வரும் பதினெண்சித்தர் மடத்தோடும், பீடத்தோடும் இணைந்து செயல்படத் தாங்களும் தங்களின் மூலம் பலரும் முன்வர வேண்டும்.

4. செயல்வீரர் பாலகிருட்டிணன் அவர்களே! முதல் கட்டமாக தமிழ்நாட்டில் உள்ள தமிழாசிரியர்களை வட்டார அளவில் (Taluk or Block or Union) அல்லது மாவட்ட அளவில் தமிழாசிரியர் மாநாடு என்று கூட்டி அம் மாநாட்டில்

- தமிழ் எழுத்துக்கள் (எழுத்திலக்கணம்),
- தமிழ்ச் சொற்கள் (தமிழ் சொல்லிலக்கணம்),
- தமிழ்மொழியின் பொருட்செறிவு (தமிழ்மொழியின் பொருளிலக்கணம்),
- தமிழ்மொழி வரலாறு (The History of the Tamil Language),
- தமிழ் இலக்கிய வரலாறு (The History of the Tamil Literature),

- தமிழ்மொழியின் கடவுட் பண்புகள் (The Divine Power of the Tamil Language),
- தமிழ்மொழியும் கடவுள்களும் (The Tamil Language and Gods),
- தமிழ்மொழியும் இந்திய மொழிகளும்,
- தமிழ்மொழியும் உலக மொழிகளும்,
- தமிழ்மொழியும் உலக வரலாறும்,
- தமிழ்மொழியும் உலக மானுட வரலாறும்,
- கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம்,
- தமிழ்மொழியின் முச்சங்க வரலாறு,
- தமிழினமும் உலக இனங்களும்,
- தமிழகமே இந்து வேதத்திற்கும், இந்துமதத்திற்கும் பிறப்பிடம், இருப்பிடம், காப்பிடம்,
- தமிழர்களே இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் நாயகர்கள், மூலவர்கள், காவலர்கள்,
- தமிழ்நாட்டு முருகக் கடவுள் ஏன் தமிழகம் தாண்டி வேறு எங்கும் கோயில்களில் கூட இடம் பெறவில்லை?,
- சிவனும், திருமாலும், பிள்ளையாரும், காளியும், துர்க்கையும் இந்தியா முழுவதும் வழிபடப்படுவது போல் ஏன் முருகன் இந்தியா முழுவதும் வழிபடப்படுவதில்லை?,
- இந்துவேத நூல்கள் ஏன் எல்லோரிடமும் நூல் வடிவில் வாழ வைக்கப்படவில்லை?,
- கடவுட் கொள்கையும் இந்துமதமும்,
- கடவுட் கொள்கையும் உலக மதங்களும்,
- இந்துமதத்தில் சாதி அமைப்புக்கள்,

- இந்துவேத நூல்களும் சாதிப் பிறச்சினைகளும்,
- இந்துமதத் தலைவர்களும் சாதிப் பிறச்சினைகளும்,
- இந்துமதச் சாதிவெறிகளை அகற்ற முடியுமா?,
- இந்துமதச் சாதிகளை ஒற்றுமைப்படுத்த முடியுமா?,
- இந்துவேத மொழி எது?,
- இந்துமதப் பூசைமொழி எது?,
- தேவாரங்களை அழித்தது யார்? ஏன்?,
- இந்து மத மறுமலர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்?,
- இந்துவேத மறுமலர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்?,
- இந்துக்களின் ஆட்சி மீட்சி பெற என்ன செய்ய வேண்டும்?,
- இந்துமதமும் இன்றைய சமய வாதிகளும்,
- இந்துமதமும் இன்றைய சமுதாய வாதிகளும்,
- இந்துமதமும் இன்றைய அரசியல்வாதிகளும்,
- R.S.S. இயக்கத்தின் சாதனைகள்,
- VHPஇன் சாதனைகள்,
- இந்து முன்னணியின் சாதனைகள்,
- தமிழ்நாட்டு மதவாதிகள் நிறுவன அமைப்பில் செயல்பட முன்வராதது ஏன்?,
- தமிழ்நாட்டு மடாதிபதிகள் ஒன்று கூடாதது ஏன்?,
- இந்துமதமும் நாத்திகப் பெரியார் ஈ.வெ.ரா.வும்,
- இந்துமதமும் பகுத்தறிவாளர்கள் எனப்படும் நாத்திகர்களும்,
- இந்துமதத்தில் மட்டும் உருவ வழிபாடு ஏன்?,
- இந்துமதத்தில் மட்டும் கணக்கற்ற கடவுள்கள் ஏன்?,

- ♦ இந்துமதச் சாத்திரியார்களாக ஆச்சாரியார்களாக ஒரே இனத்தவர்கள் இருப்பது ஏன்?,
- ♦ தமிழ் நாட்டுக் கோயில்களில் சிலவற்றில் மட்டும் சமசுக்கிருத மொழி பூசைமொழியாக இருப்பது ஏன்?,
- ♦ இந்துவேத நூல்கள் தமிழ்மொழியில் இருக்கும் போது இந்துமதப் பூசைகளும் சடங்குகளும் சமசுக்கிருத மொழியில் நடத்தப்படுவது ஏன்?,
- ♦ 64 திருவிளையாடல்களும் தமிழ்நாட்டில் மட்டுமே நிகழ்ந்தது ஏன்?,
- ♦ 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தமிழர்களாகவே இருக்க நேரிட்டது ஏன்?
- ♦ மாரியம்மன் வழிபாடு தமிழ்நாட்டில் மட்டும் இருப்பது ஏன்?
- ♦ இந்துமத வரலாற்று முதன்மை பெற்ற சிவ, வைணவக் கோயில்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது விழுக்காடு தமிழகத்திலேயே இருப்பது ஏன்?
- ♦ இந்துமதத்தில் அருள் வந்தும் மருள் வந்தும் செயல்படும் அருளாளர்களும், மருளாளர்களும் தமிழகத்தில் மட்டுமே அதிகமாக இருப்பது ஏன்?
- ♦ இந்துமதத்தில் காவடி எடுப்பதும், தீச்சட்டி எடுப்பதும்; பால்குடம், சந்தனக் குடம், கரகம் முதலியவை எடுத்து ஆடுவதும்; நெருப்பு மிதிப்பதும் தமிழகத்தில் மட்டுமே அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன?
- ♦ கடவுளரின் சிலைகளைச் செய்யும் சிற்பிகளும், கோயில் கட்டிடக் கலைஞர்களும் தமிழகத்தில் மட்டுமே அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

- ♦ இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடமும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடமும் தொடர்ந்து இருபதாண்டு காலமாக பத்துப் பதினைந்து கோடி அறிக்கைகளையும், ஆயிரக் கணக்கில் அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் நூற்றுக்கணக்கில் நூல்களையும், கணக்கற்ற இந்துவேத விளக்கக் கூட்டங்களையும், ... நிகழ்த்தியும் கூட தமிழ்நாட்டில் இந்துவேத விழிச்சியோ, இந்துமத எழுச்சியோ ஏற்படாதது ஏன்? ஏன்? ஏன்?,

... என்று இப்படிப்பட்ட சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட தனித் தலைப்புக்களில் சிந்திக்கவும், சிந்தனை அரங்குகளை நிகழ்த்தவும் தங்களைப் போன்ற படித்த இந்துமதச் செயல் வீரர்கள் முன் வர வேண்டும், முன் வர வேண்டும், முன் வர வேண்டும். இதற்காக தாங்களும் தங்களைப் போன்றோரும் குருபீடத்தைச் சந்திப்பதும், குருபீடம் உங்களைச் சந்திப்பதும் அடிக்கடி நிகழ வேண்டும், அடிக்கடி நிகழ வேண்டும், அடிக்கடி நிகழ வேண்டும். சிந்தியுங்கள், சந்தியுங்கள்; சிந்தியுங்கள், சந்தியுங்கள்; சிந்தியுங்கள், சந்தியுங்கள்.

5. தாங்கள் வழக்குரைஞர் என்பதால் இந்த விரிவான அஞ்சலுக்கு நூற்றுக்கணக்கான நகல்கள் எடுத்து தாங்கள் பொறுப்பேற்றுள்ள மூன்று மாவட்டத்திற்குரிய இந்துமத இயக்கத்தவர்கள், தமிழகம் முழுவதும் உள்ள தங்களுக்குத் தெரிந்த இந்துமதத் தலைவர்கள், இந்துமத இயக்கப் பொறுப்பாளர்கள், செயல்வீரர்கள், தொண்டர்கள், இந்துமத ஆர்வலர்கள், ... முதலியோர்களுக்கெல்லாம் அனுப்பி வையுங்கள்.

**குறிப்பு**:-

a) தங்களுடைய யோகி ராம் சுரத்குமார் அமைப்பில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உங்கள் வட்டார வீரமங்கை

சரோசினி நாச்சியார் (C-27, N.G.O. Colony, Nagerkoil) அவர்களுக்கும் இந்த விரிவான அஞ்சல் நகலை அனுப்புங்கள்.

b) முடிந்தால் தங்களின் அன்புக் கொடையாக குருபீடக் காணிக்கையாக இந்த அஞ்சலுக்கு சில நூறு நகல்கள் (Xerox or Cyclostyle copies or Printed Copies) பதினெண்சித்தர் மடத்திற்கு அனுப்பி வையுங்கள். அப்போதுதான் இந்த அஞ்சலின் நகல்கள் உங்களையும் உங்களின் சாதனைகளையும் இன்றுள்ள இந்துக்களுக்கிடையிலும் இந்துமத வரலாற்றிலும் நிலையாக நின்று பயன் நல்கச் செய்திடும்.

புரிந்து விரும்பி, நம்பி, ஏற்றுச் செயல்படுக.

வெற்றி நமதே! நாளை நமதே!

ஒன்று சேருவோம்! வெற்றி பெறுவோம்!

6. குவலய குருபீடம், பரபிறம்மம், நான்கு யுக நாயகம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், அண்டபேரண்ட அனாதி ஆதி சத்திகள் சன்னிதானம், கருமூலப் பண்டாரம், இந்துவேத நாயகம், இந்து வேத பீடம், இந்துமதத் தந்தை, இந்துமதப் பீடம், இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, ஆதி அனாதி கடந்த தம்பிரான் சாமிகள் (அடிகளார்), குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களால்தான் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் உரிய பணிகளுக்கு விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழிப்பயனாக இருந்திட முடியும், இருந்திட முடியும், இருந்திட முடியும். ... இப் பேருண்மையைத் **தெரிந்து அறிந்து ஆராய்ந்து புரிந்து உணர்ந்து தெளிந்து நம்பி ஒப்புக் கொண்டு ஏற்றுச் செயல்படுத்த முன் வர வேண்டுகிறோம்**.

7. இந்த அஞ்சலை நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் சிந்திப்பது எப்போது? குருபீடத்தைச் சந்திக்க வருவது எப்போது? இந்த அஞ்சலின் 7 பிரிவுகளும் குருதேவர் திருவாய் மலர்ந்தருளிய கருத்துக்களின் சுருக்கம். இதற்கு குருபீடம் ஒப்பம் வழங்கியுள்ளார். உடன் பதில் எழுதுக. செயல்படுக.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**பதினெண்சித்தர் மடம்,**
**இந்துமதத் தந்தை, தலைவர்,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**
**9-10-1992.**

நகல் தயாரிப்பு:- அருள்மிகு ஆத்தாள் தேவி தில்லைக் காளியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் கவிதா தேவி.

[இந்த அஞ்சலை தங்கள் வட்டாரத்தார் அனைவருக்கும் படித்துக் காட்டவும். முடிந்த அளவு தலைமைப்பீடத்திற்கு நகல்கள் அனுப்புங்கள். பொன்னேரிக்கு 1 பேனா நகலாவது அனுப்புங்கள்.]

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியாள் கவிதாதேவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# ஒரு காலத்தில் இந்துமதம் உலகம் முழுவதும் பரவியிருந்தது

12-12-1992,
சென்னை.

பெறுநர்:-
அருளரசு மாசிலாமணி,
சமய இலக்கியச் சொற்பொழிவாளர்,
அறநிலைய ஆட்சித் துறை,
திருச்செந்தூர் - 628215. Phone: 221

அருள்மிகு திருவருட் செல்வர் மாசிலாமணி அவர்களுக்கு,

இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவர், குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், பதினெண்சித்தர் மடாதிபதி அவர்கள் தங்களுடைய 01/12/92ஆம் தேதியிட்ட அஞ்சலுக்குத் திருவாய் மலர்ந்தருளிய பதிலின் சுருக்கம்.

1) பேரார்வமுடையீர்! பல்வேறு அலுவல்களின் காரணமாக தங்களின் 1/12/92 நாளிட்ட அஞ்சலை இன்று 12/12/92ஆம் நாள் சனிக்கிழமை காலையில்தான் குருமகா சன்னிதானத்துக்கு வாசித்துக் காட்டப் பட்டது. திருமடம் தங்களின் அஞ்சல் வாசகங்கள் கண்டு மிகவும் மகிழ்ந்தது. தங்களைப் பாராட்டி வாழ்த்தியது. இன்றைக்கு

இவ்வையகத்தில் இமயம் முதல் குமரி வரை உள்ள இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும்தான் பதினெண்சித்தர்களுடைய இந்துவேத மதமான **'இந்துமதம்'** வாழ்கிறது. ஆனால், ஒருகாலத்தில் இந்த இந்துமதம் உலகம் முழுவதும் பரவியிருந்தது என்பதற்குச் சான்றாக இலிங்கங்களும், மற்ற இந்துமதச் சின்னங்களும் ஆசுதிரேலியா, அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும்; உருசியா, சைபீரியப் பாலைவனங்களிலும்; செர்மனி, அராபிய நாடுகள், ஆப்பிரிக்கக் கண்டப் பகுதிகள், மத்திய அமெரிக்கா, இத்தாலி, சீனா, இங்கிலாந்து, பிரான்சு, ... முதலிய பல நாடுகளிலும் இன்றும் காணக் கிடக்கின்றன, கிடைக்கின்றன. இப்படி உலகளாவிய இந்துமதம் இந்தியத் துணைக் கண்டத்துக்குள் மட்டும் சுருங்கியதற்குக் காரணம் இந்துமத சரித்தர, சரித்திர, சரித்திறங்களும், இந்துமதச் சாத்தர, சாத்திர, சாத்திறங்களும், இவை சார்ந்த இந்துமத நூல்களும், இந்துவேத நூல்களும் மறக்கப்-பட்டதாலும், மறக்கடிக்கப்பட்டதாலும், துறக்கப்பட்டதாலும், துறக்கடிக்கப்-பட்டதாலும் சூழ்ச்சியாக சிதைத்தும், சீரழித்தும், திருத்தியும், மாற்றுமொழியில் மொழி பெயர்த்தும், செல்வாக்கிழந்து செல்லாக் காசு ஆகும்படிச் செய்துவிட்டதுதான்.

இப்பொழுது இந்துவேதத்தை இம் மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியுமான பரப்பிறம்மம், நிறையக்ஞர், கருமூல ஆதீனம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; இந்துவேத நூல்கள் 396, இந்துமத நூல்கள் 36, பதினெண்மேல் கணக்கு கீழ்க்கணக்கு மையக்கணக்கு நூல்கள், பதினெண்சித்தர்களின் நூல்கள், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் நூல்கள், 48 வகைச் சித்தர்களின் நூல்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய அருளாளர்களின் நூல்கள், ... முதலியவற்றையும், முதலியவற்றின் பின்னணியில் இந்துவேத இந்துமத சரித்தர, சரித்திர, சரித்திறங்களையும்

முறையாக வெளியிட்டு இந்துவேத வளவளர்ச்சியையும், இந்துமத மறுமலர்ச்சியையும், இந்துக்களின் ஆட்சி மாட்சி மீட்சியையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்! ஈடுபட்டுள்ளார்!! ஈடுபட்டுள்ளார்!!!

2) மேற்படி பணிகளுக்காகவே 10 கோடிக்கு மேற்பட்ட அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் அச்சிட்டு நாடு முழுவதும் வழங்கியுள்ளார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய, பெரிய நூல்களையும் அச்சிட்டு மலிவு விலையிலும், இனாமாகவும் தொடர்ந்து பொது-மக்களிடையில் வழங்கி வருகின்றார். ஆயிரக்கணக்கான சித்தரடியார்களையும், சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும் முறையாகப் பயிற்சி அளித்துத் தயாராக்கிப் பொதுமக்களுக்கு உண்டாகக் கூடிய நாள் கோள் மீன் பாதிப்புக்கள், செவ்வாய் சனி முதலியவற்றின் வல்லாட்சி, (1) காற்று (2) கருப்பு (3) பேய் (4) பிசாசு (5) பில்லி (6) சூனியம் (7) ஏவல் (8) செய்வினை (9) வைப்பு (10) கழிப்பு (11) மருந்து (12) கண்ணேறு ஆகியவற்றின் தாக்குதல்கள், மனத் தளர்ச்சி அயர்ச்சி அச்சம் கூச்சம் மாச்சரியம் முதலியவற்றின் தயக்க மயக்க தேக்க வீக்கப் பாதிப்புகள் அனைத்துக்கும் யாகத் தீ வளர்த்து மந்திரித்தல், அருளூறு பூசனைப் பொருட்களான திருநீறு, குங்குமம், மஞ்சள் வழங்குதல், முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம் கட்டுதல், தற்காப்பு சத்திக்கும் அருட்சித்திக்கும் சக்கரங்கள் வழங்குதல், புதிய கோயில்களுக்கு உயிர்ப்பு ஊட்டுதல், பழைய கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்தல், ... முதலிய இன்னோரன்ன பல பணிகளை நிறைவேற்றி வருகிறார்.

3) மேற்கண்ட பணிகளுக்காக முறையாக குருகுலம், தருகுலம், திருகுலம், கருகுலம் எனும் நான்கையுமே முறையாக உருவாக்கிச் செயல்பட்டு வருகிறார். இவற்றின் மூலமாக சாத்திரியார்களும்

தோத்திரியார்களும் முறையாகத் தயாராகும் பணி இனிதாகத் தயாராகி வருகின்றது.

4) அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள உலக முதல் வேதமும், மூல வேதமும், பொது வேதமும், தாய்வேதமும் ஆன இந்துவேதத்தை ஓதவும், ஓதுவிக்கவும் இந்துவேத பாடசாலை நிகழ்த்தி வருகிறார். இதன்மூலம் அருளுலக அக்கறையும், ஆர்வமும் உடையவர்களுக்கு பூசை, தவம், குண்டலினி, ஓகாசனம், யோகாசனம், ஞானக்காட்சி, அருட்கணிப்பு, ஐந்தர, ஐந்திர, ஐந்திறக் கலைக் கணிப்பு, ... முதலியவைகளையும் கற்றுத் தருகிறார்.

5) இப்படி உலகுக்கு இன்றியமையாத அருளுலகக் கலைகளையும், அறிவியல்களையும் கற்றுத் தரும் குவலய குருபீடம், நான்குயுக நாயகம், அண்டபேரண்ட அனாதி ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் தமது பணிகள் அனைத்தையுமே ***இலைமறை காயாக*** இருந்தே செய்து வருகின்றார். ஏனென்றால், பொதுமக்களைத் தாமே நேரில் சந்திப்பதை விட தம்மால் உருவாக்கப்பட்ட அடியான்களும், அடியார்களும், அடியாள்களும் பொதுமக்களைச் சந்தித்து அருளுலக இருளகற்றும் பணிகளைச் செய்தால்தான் இப் பணி தொடர்ந்து வாழையடி வாழையென நிகழ்ந்திடும், நிகழ்த்தப்பட்டிடும். எனவே, தங்களைப் போன்றோர் நமது குருபீடத்தால் எப்போதும் வரவேற்கப்படுவார்கள், வரவேற்கப்படுவார்கள், வரவேற்கப்படுவார்கள்.

6) சற்றும் எதிர்பாராதவிதமாக இந்தக் கலியுகத்தில் இந்துமதத்தவர்கள் தங்களுடைய இந்துமத வரலாறுகளையும், இந்துவேதத்தையும் நாடித்

தேடிடும் நாட்டம் இல்லாதவர்களாகி விட்டார்கள். எனவேதான், இந்துமத மறுமலர்ச்சிக்காக இமாலய முயற்சிகளைச் செய்யக் கூடிய தனிமனிதர்களும், நிறுவனங்களும் தொடர்ந்து தங்களுடைய முயற்சிகளில் தளர்ச்சியுற்று, அயர்ச்சி பெற்று, வீழ்ச்சி பெற்று, தாழ்ச்சி பெற்று விடுகின்றன. இவற்றை யெல்லாம் எண்ணித்தான் குருபீடம் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு என்ற இரண்டிலும் இந்துவேதமும், இந்துமதமும் நடைமுறைப் படுத்தப் பட்டு அக வாழ்விலும், புற வாழ்விலும் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிச் செழுச்சியும் ஏற்படுவதற்காக அல்லது ஏற்படுத்துவதற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை (இ.ம.இ. I.M.I.) உருவாக்கி உள்ளார்.

இதற்கு மிகத் தெளிவான கொள்கையும், குறிக்கோளும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்புத் திட்டங்களும், நடைமுறைக்குரிய செயல்திட்டங்களும் வகுக்கப் பட்டிருக்கின்றன. இந்த இயக்கம் முழுக்க முழுக்க ஓர் பண்பாட்டுப் புரட்சி இயக்கம். (A Cultural Revolution Movement). இன்னும் சொல்லப் போனால், இதை ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கம் (The Social Reformation Movement) என்றும் கூறலாம்.

ஏனென்றால், இந்துக்களாக வாழ்கின்ற மக்களுக்கிடையில்; ஏறத்தாழ எவருக்குமே தாங்கள் காணுகின்ற கோயில்கள், தாங்கள் வழிபடுகின்ற கடவுள்கள், தாங்கள் கடைப்பிடிக்கின்ற சடங்குகள், தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள அருளாளர்கள், மடாதிபதிகள், சாமியார்கள், ... முதலியவர்களைப் பற்றி இந்துவேதம் என்ன கூறுகிறது? இந்துமதம் என்ன கூறுகிறது? இந்துவேத மத இலக்கியங்கள் என்ன கூறுகின்றன? என்று எண்ணிப் பார்க்கும் அறிவுப் பூர்வமான அக்கறையோ, ஆர்வமோ இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவேதான், குருபீடம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து இருக்கிறது.

இருந்தும் இந்துக்களிடையில் இந்த அமைப்பு நல்ல வளர்ச்சியைப் பெறவில்லை.

எனவேதான் குருபீடம் 'நெற்றியில் திருநீறோ, குங்குமமோ, சந்தனமோ, சாந்தோ, ... அணிந்து **சாமி கும்பிடும் பத்தர்கள் அனைவருமே இ.ம.இ. உறுப்பினர்கள்தான்'** என்றும்; 'அன்றாடம் ஒரு நொடியாவது அகல்விளக்காவது ஏற்றிப் பூசை செய்யப்படக் கூடிய கோயில்கள் என்று பூசை செய்யக் கூடிய **அனைத்துக் கோயில்களும் இ.ம.இ.யின் அலுவலகங்கள்தான்'** என்றும்; 'குரு, குருக்கள், குருமார், பூசாறி, ஓதுவார், தேசிகர், பண்டாரம், சாத்திரியார், ... எனப்படுகின்றவர் அனைவருமே **இ.ம.இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள்தான்'** என்றும் அறிவித்து; தனது வசதி வாய்ப்புகளுக்கேற்ப அவ்வப்பொழுது தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை எனும் நான்கையும் பதினெண்சித்தர் பீடத்தின் குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் எனும் முப்பெரும் மரபுகளுக்கேற்ப வழங்கி வருகிறார். இப்பணிகளில் தாங்கள் தங்களுடைய தர, திர, திற, தீர, வீர, உர, மற நிலைகளுக்கேற்பப் பங்கேற்கலாம்.

7) குருபீடம் இந்த 20ஆம் நூற்றாண்டில் உலக மார்க்சீயச் சிந்தனைகளால் விளைந்திட்ட நாத்திக உணர்வுப் போக்குகளாலும்; நம் நாட்டில் சிந்தனைச் சிற்பி, தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் நாத்திகக் கழகப் பணிகளின் தாக்குதல்களாலும்; வட இந்தியாவில் மகாத்மா காந்தியின் கலப்படமான, போலியான, மதச் சமாதானச் சமத்துவக் கருத்துக்களின் வீச்சுக்களாலும்; அவருடைய காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் பலரின் தன்னல வெறிமிக்க, பதவி மோகப் போக்குகளாலும்; இந்துமதப் பற்றும், பாசமும், பிடிப்பும், பண்பாட்டு உயிர்த் துடிப்பும் மிகப் பெரிய அளவில் பாதிப்புக்களைப்

பெற்று விட்டன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்த இருபதாம் நூற்றாண்டு சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் எந்தவிதமான மெய்யான தூய்மையான கொள்கையோ, குறிக்கோளோ இல்லாமல் காலிச் சிந்தையும், போலி நெஞ்சும், கூலி உணர்வும் உடையவர்களாகவே வாழ்ந்ததாலும், வாழுவதாலும் இந்துச் சமுதாயமும், இந்து அரசியலும் மிகப் பெரிய சீரழிவுகளேயும், முறைகேடுகளேயும் பெற்று விட்டன. எனவே, இந்துக்களேக் காப்பாற்ற வேண்டிய அரசுத் துறை எனும் மாபெரும் இயந்திரம் பழுதுற்றுப் பயனற்றுப் போய்விட்டது.

இதைப் போலவே, இந்தத் துணேக் கண்டத்து சமுதாயவாதிகளில் பெரும்பாலானவர்கள் எந்தப் பிறச்சினேகளேயும் சந்தித்துப் போராடக் கூடிய தரமோ, திரமோ, திறமோ, வீரமோ இல்லாத கோழைகளாகவே போய்விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், கணிசமான அளவு பல கோழைகள் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் மாறிவிட்டார்கள். எனவே, மாற்று மதத்தவர்களும், வேற்று நாட்டவர்களும் நமது இந்து சமுதாயக் கட்டமைப்புக்களேயும், கோட்பாடுகளேயும் நன்கு திட்டமிட்டு தாழ்த்தித் தகர்த்து மிகப்பெரிய அளவில் சிதைவுகளேயும், சீரழிவுகளேயும், சீர்கேடுகளேயும், சிக்கல்களேயும், தேக்க முடக்கங்களேயும், பயனற்ற திருத்தங்களேயும், திருப்பங்களேயும் உண்டாக்கி விட்டார்கள், உண்டாக்கி விட்டார்கள், உண்டாக்கி விட்டார்கள்.

இவற்றை யெல்லாம் சரிக்கட்டவே, செம்மைப்படுத்தவே, நலப்படுத்தவே நமது குருபீடம் இந்து முன்னேற்றக் கழகம் (இ.மு.க. I.M.K.) என்ற ஒரு அமைப்பை உருவாக்கி உள்ளார். இதற்கென மிகத் தெளிவான கொள்கை விளக்கமும், குறிக்கோள் விளக்கமும், செயல்திட்ட விளக்கமும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதாவது இ.மு.க. இந்துவேத வழியில் நமது சமுதாயவாதிகளேயும், அரசியல்வாதிகளேயும் செம்மைப் படுத்துவதற்காகவே இ.மு.க. (I.M.K.) தோற்றுவிக்கப்-

பட்டிருக்கிறது. இந்தக் கழகம் ஏற்கனவே உள்ள சமுதாயவாதிகளையும், அரசியல்வாதிகளையும் செம்மைப்படுத்த முயல்வதோடு; புதிதாகவே தேவையான தர, திர, திற, வீர மிக்க சமுதாயவாதிகளையும், அரசியல்வாதிகளையும் உருவாக்குகின்ற மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. எனவே, தங்களைப் போன்ற, பொதுத் தொண்டில் மெய்யான அக்கறையும், ஆர்வமும் உடையவர்கள் இந்த இ.மு.க.வில் இணைந்து செயல்பட்டால் மிக மிக நல்லது. தங்களைக் குருபீடம், தமது இரு நிறுவன நிர்வாகங்களிலும் செயலாற்ற அழைக்கிறது.

8) ஒருவேளை தங்களால் இவ்விரு அமைப்புக்களிலும் செயல்பட இயலாவிட்டால் எமது குருபீடம் பதினெண்சித்தர்கள் அருளியுள்ள (1) இருக்கு வேதம், (2) அசுர வேதம், (3) யாம வேதம் (சாம வேதம்), (4) அதர்வான வேதம், (5) இருக்கு சுருதி, (6) அசுர சுருதி, (7) யாமச் சுருதி, (8) அதர்வானச் சுருதி, (9) இருக்கு ஆரணம், (10) அசுர ஆரணம், (11) யாம ஆரணம், (12) அதர்வான ஆரணம், (13) இருக்கு ஆகமம், (14) அசுர ஆகமம், (15) யாம ஆகமம், (16) அதர்வான ஆகமம், (17) இருக்கு மீமாம்சை, (18) அசுர மீமாம்சை, (19) யாம மீமாம்சை, (20) அதர்வான மீமாம்சை, (21) இருக்கு நாதம், (22) அசுர நாதம், (23) யாம நாதம், (24) அதர்வான நாதம், (25) இருக்கு சித்தம், (26) அசுர சித்தம், (27) யாம சித்தம், (28) அதர்வான சித்தம், (29) இருக்கு ஓதம், (30) அசுர ஓதம், (31) யாம ஓதம், (32) அதர்வான ஓதம், (33) இருக்கு போதம், (34) அசுர போதம், (35) யாம போதம், (36) அதர்வான போதம், (37) இருக்கு முறை, (38) அசுர முறை, (39) யாம முறை, (40) அதர்வான முறை, (41) இருக்கு மறை, (42) அசுர மறை, (43) யாம மறை, (44) அதர்வான மறை, (45) இருக்கு நெறி, (46) அசுர நெறி, (47) யாம நெறி, (48) அதர்வான நெறி ஆகிய 48களிலிருந்தும் இன்றைய மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றை (1) வரியியல் (கைரேகை),

(2) பிறப்பியல் (சாதகம்), (3) பெயரியல் (பெயர் ராசி), (4) அங்கவியல் (உறுப்பிலக்கணம்), (5) மனையியல் (மனையடி சாத்திரம்) எனும் ஐந்தின் கணிப்புக்களின் மூலம் பரிந்துரைகளையும், பரிகாரங்களையும் வழங்குகின்றோம். இப்பணியில் தாங்கள் எந்த நிலையில் இருந்து வேண்டுமானாலும் தொண்டாற்றலாம். தங்கள் ஊதியம் சாதனைகளுக்கேற்ப வழங்கப்படும். தாங்களும் பொதுமக்களுக்கு உதவியதாக ஆகிடும்.

ஏனென்றால், மேற்படி ஐந்து வகைக் கலைகளையும் இந்துவேதம் தெரியாதவர்கள் வெறும் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், இந்துவேதத்தின் அரிய பெரிய சாதனைகளான மேற்படி ஐந்துவகைப் பட்ட கலைகளும் பொதுமக்களுக்குச் சிறப்பாகப் பயன்பட முடியாமல் போய்விட்டன. எனவே, தங்களின் தொண்டால், இந்துவேதத்தின் நோக்கும், போக்கும் ஊக்கம் பெறும், ஆக்கம் பெறும்.

நமது அண்டபேரண்ட அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளார் (சுவாமிகள்), அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் உடல் நோய்க்குரிய சித்த மருத்துவத்தைச் செய்யும் சித்த மருத்துவர்களும், பல்வேறு நாட்டு மருத்துவ முறைகளும் போட்டி போட்டுக் கொண்டு தொழில் அடிப்படையில் வளர்ந்து வருவதால் உயிர் நோய்களுக்குரிய மருந்துகளையும், மருத்துவ முறைகளையும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் சாதனைகளான (1) நேமம், (2) இணை நேமம் (3) துணை நேமம் (4) நியமம் (5) இணை நியமம் (6) துணை நியமம் (7) நிடதம் (8) இணை நிடதம் (9) துணை நிடதம் (10) நிட்டை (11) இணை நிட்டை (12) துணை நிட்டை (13) நீதி (14) இணை நீதி (15) துணை நீதி (16) விதி (17) இணை விதி (18) துணை விதி ஆகிய 18களிலிருந்தும் தேர்ந்தெடுத்து மக்களுக்கு வழங்கி வருகிறார். இதைப் போலவே தனிமனித வாழ்க்கைச் சிக்கல்கள், தனிமனித

மனநிலை, அறிவு நிலை, உணர்வு நிலை, செயல்நிலைச் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள், உறவு முறைச் சிக்கல்கள், உரிமை முறைச் சிக்கல்கள், தொழில் முறைச் சிக்கல்கள், குலதெய்வச் சிக்கல்கள், விருப்ப தெய்வச் சிக்கல்கள், ... முதலியவைகள் அனைத்திற்கும் மருந்தாகப் பரிகாரங்களை வழங்குகிறார்.

9) சமயச் சொற்பொழிவாளராகப் பயிற்சி செய்து 25 வருடங்களுக்கு மேலாகச் சமயப் பணியாற்றி வரும் தங்களைக் குருபீடம் மிகவும் மதிக்கிறது. பாராட்டுகிறது. தங்களுக்கென்று நன்கு அறிமுகமான இந்துமதப் பத்தர்கள், பற்றாளர்கள், அக்கறையாளர்கள், ஆர்வலர்கள், ஏந்தாளர்கள், அறிஞர்கள், மேதைகள், ... கிடைத்திருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் இந்த அஞ்சலுக்குக் கையெழுத்துப் பிறதியாக தங்களின் கைப்பட எழுதியோ; அல்லது தங்களின் மகளின் மூலம் தட்டெழுத்துப் பிறதியாகவோ பல தயாரித்து தொடர்ந்து அனுப்புங்கள். அதன்மூலம் நீங்கள் குருபீடத்தின் திருமடத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்குப் பேருதவி புரியலாம். அதாவது, விரும்புகிறவர்கள் குருபீடத்தில் தீட்சை பெற்று (1) மந்தரம், (2) மந்திரம், (3) மந்திறம், (4) மாந்தரம், (5) மாந்தரீகம், (6) தந்தரம், (7) தந்திரம், (8) தந்திறம், (9) தாந்தரம், (10) தாந்தரீகம், (11) எந்தரம், (12) எந்திரம், (13) எந்திறம், (14) ஏந்தரம், (15) ஏந்தரீகம், (16) பூசை, (17) தவம், (18) ஞானம் எனும் 18 அருளூறு அருள் பெறு வழிகளில் ஏதேனும் ஒன்றில் குருவழியாக பயிற்சி முயற்சிகளைச் செய்து நல்ல தேர்ச்சிகளைப் பெற்று உயர்ச்சிகளை அடையலாம். அதன்மூலம், எல்லாத் துறைகளிலும் செழிச்சியைப் பெறலாம்.

10) மேற்படி குருவழி தீட்சைக்கும், தேர்ச்சிக்கும் வழி செய்யும் வகையில்தான் குருதேவர் அடிக்கடி தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கூடத்துச் சொற்பொழிவுகளையும் (Hall Meetings), ஓகாசன யோகாசனப் பயிற்சிகளையும் நிகழ்த்துகிறார். இந்த நிகழ்ச்சிக்கு **கருத்துப் பரிமாற்ற**

**சிந்தனை அரங்கம்** (Main Camps) என்று பெயர். இந்த க.ப.சி.அ. தங்களைப் போன்ற தொண்டர்களால் குருவிடம் தீட்சை பெறுபவர்களைக் குருதேவரோடு தங்கியிருந்து பயிற்சிகள் பெறுவதற்காக {குறைந்தது மூன்று நாட்கள்} ஒவ்வொரு தனிமனிதரிடமும் அவர்களுடைய சாப்பாட்டிற்காகவும், பயிற்சி இடத்தின் வாடகைக்காகவும், குருபீடமும், திருமடத்துச் சன்னிதானங்களும் பயிற்சி முகாமுக்கு வந்து செல்வதற்குரிய பயணச் செலவிற்காகவும், பயிற்சி முகாம் பூசைச் செலவிற்காகவும் ஒரு குறிப்பிட்ட தொகை வசூலித்து பயிற்சி முகாமை சிறப்பாக நடத்தி முடிக்கலாம்.

இப் பயிற்சி முகாம் நடக்கும் இடத்திலேயே குருபீடம் பொதுமக்களுக்குச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், மக்களுக்கு அருளாசி வழங்கவும், வரியியல் பெயரியல் பிறப்பியல் அங்கவியல் மனையியல் முதலியவைகளின் மூலம் அருட்கணிப்பு செய்து முக்காலத்தை உணர்த்திடவும், தேவையானவர்களுக்குப் பரிகாரங்கள் செய்து காத்தருளவும் இயலும், இயலும், இயலும். எனவே, குருபீடத்தை தாங்கள் அறிந்த பல பெரிய மனிதர்களின் சுற்று வட்டாரங்களில் க.ப.சி.அ. நடத்திப் பொதுமக்கள் இந்து வேதப் பயனை அடையும் படிச் செய்யலாம்.

11) தங்களின் மூலம் பல பழைய கோயில்களுக்கு அருட்கொடை வள்ளலாகிய நமது அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியாரின் மூலம் புத்துயிர்ப்புக் குடமுழுக்கு பூசைகள் செய்யலாம். புதிய கோயில்களுக்கு உயிர்ப்புக் குடமுழுக்குப் பூசைகள் செய்யலாம். இதேபோல், பதினெண்சித்தர் மடத்திலிருந்து முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கங்கள் முதலியவைகளைப் பெற்று, மிக எளிமையான காணிக்கையைப் பெற்றுக் கொண்டு எவ்விதமான வேறுபாடு இல்லாமல், கருதாமல், பாராட்டாமல் அனைவருக்குமே ஆற்றுநீர் போல அருள் வழங்கலாம்.

உங்களுக்கு எவ்விதமான வருத்தமும் இன்றி பொதுமக்களுக்கு திருத்தமாக மிகப் பெரிய அளவில் அருட்பணிகளை ஆற்றலாம். எனவே, அன்பு கூர்ந்து திருமடத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் பணியாற்றுங்கள்.

12) குருதேவர் கடந்த மாதம் நாகர்கோயிலில் சந்தித்து உரையாற்றியவர்களின் முகவரிகள் இத்துடன் கொடுத்துள்ளோம். அவர்களையும் சென்று பார்த்துப் பேசவும்.

(1) பாலகிருட்டிணன், வழக்கறிஞர், கோர்ட் ரோடு, நாகர்கோயில்.

(2) சரோசினி, C-27, N.G.O.காலனி, நாகர்கோயில்.

**அன்பு**

**பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்.**

(உண்மை நகல்)

கு. இரவிமணி.

***// இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. இறுதியில் சித்தரடியார் திரு கு. இரவிமணி அவர்களின் கையெழுத்து இருந்தது. //***

# இந்துக்களுக்கு விளக்கம்

"இந்துவேதம் என்பது; இதுவரை தோன்றிய மதமாக இருந்தாலும் சரி, வாழ்ந்து கொண்டு இருக்கிற மதமாக இருந்தாலும் சரி, தோன்றக்கூடிய மதமாக இருந்தாலும் சரி, இதுதான் தாய் மதமாக இருக்கிறது, மூலமாக, கருவாக, அடிப்படையாக இருக்கிறது என்பதுதான். இந்தப் பேருண்மையினை உலகிற்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

இந்து வேதத்தின் மூலமாகத்தான் மற்ற மதங்கள் பிறந்தன, பிறப்பிக்கப்பட்டு வருகின்றன, நாளையும் பிறக்கும். எனவே இதுதான் அடிப்படை. இதற்கான கருத்துக்கள், சான்றுகள், ஊன்றுகள் இந்துவேதத்தில் இருக்கின்றன. இந்துவேதம் என்ற ஆலமரத்தின் விழுதுகளாகவோ, கிளைகளாகவோ இலைகளாகவோதான் எந்த மதமும் தோன்றின என்பதனையே இது விளக்குகின்றது, எனவே இந்து மதத்திற்கு, இந்து வேதத்திற்கு எந்த மதத்தின் மீதும் வெறுப்போ, மறுப்போ, பகையோ, எதிர்ப்போ இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

இந்து மதத்தையும் எந்த மதமும் எதிர்க்க முடியாது. எல்லா மதங்களும் அந்தந்த நாட்டில் உள்ள பழைய மதங்களை சீர்திருத்த முற்பட்டவர்களின் பெயரால் ஏற்படுகின்றவைதான். தோன்றிய, தோன்றக்கூடிய மதங்கள் எதுவாக இருந்தாலும் சீர்திருத்தம் செய்யப்படுபவர்களின் பெயரால் ஏற்படுபவைகள்தான். இந்த அடிப்படையிலே பார்த்தால் இவைகள் யாவும் இந்து மதத்திலிருந்து பிறந்தவைகள்தான். .. .. .."

**// 'இந்து வேதம்தான் மூல வேதம்' என்ற ஒலிப்பேழையில் குருதேவர் அருளிய வாசகங்களின் ஒரு பகுதி. //**

# குருதேவரின் தன்னிலை விளக்கம்

"அன்பு மகனே! நான், என் தாய், உடன் பிறந்தார், ஒரு கோடி ரூபாய் சொத்துக்கு உரிமை, என் மனைவி, மகன்கள், அடியான்கள், அடியார்கள், ... முதலிய யாரையுமே கண்டிப்பதில்லை, எதிர்த்துப் பேசுவதில்லை, யாருடனும் என் விருப்பத்திற்காகப் போராடியதில்லை, எதையும் வற்புறுத்திப் பெற்றதில்லை; யார் என்னை ஒரு சாண் விலகினாலும், யாம் ஒன்பது முழம் விலகி வாழ்வதுதான் எமது பழக்கம். எனவேதான், நான் மலை அணில் என்றும், கடல் பறவை என்றும், பரந்த வெளியிலே ஓடி வாழும் கரும்புலி என்றும், எங்கும் தவழும் தென்றல் என்றும், எல்லோரிடத்திலும் வேறுபாடு காட்டாது அன்பு செலுத்தும் பருவ மழை என்றும், யாராலும் எதனாலும் தடுத்து நிறுத்த முடியாதபடி தன் போக்கில் செயல்படும் கோடைக் கால மழையின் இடி என்றும், ... சிறப்பாகப் பாராட்டப்பட்டு வருகிறேன். .. .. .."

**//குருதேவர் அவர்கள் 18-6-1992இல் எழுதிய ஒரு அஞ்சலில் இருந்து எடுக்கப்பட்ட வரிகள்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

- இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் அறிவுப் பூர்வமாக கல்வியாகக் கற்கக் கூடிய விஞ்ஞானங்களே!
- இந்துமதக் கோயில்கள் இந்து வேத இந்துமதக் கல்வியை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்குகின்ற நிலையங்களே!
- இந்துமதக் கோயில்கள் கடவுள்களின் வீடுகளே!

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-